# முல்லை நிலமும் கார் (கால) நாற்பதின் வர்ணனையும்

*முனைவர் க. மகேஸ்வரி*
உதவிப்பேராசிரியர், பாரத் அறிவியல் நிர்வாகவியல் கல்லூரி
தஞ்சாவூர்

மலர்: 4

இதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2019

ISSN: 2454-3993

## முன்னுரை

தமிழ்மொழியின் அழியாத செல்வமாகவும், தமிழரின் வாழ்வியலைக் காட்டும் காலக்கண்ணாடியாகவும், பழமைக்கும் புதுமைக்கும் பாலமாகவும் இருப்பது தொல்காப்பியம் ஆகும். தொல்காப்பிய இலக்கணத்தோடு சாகாவரம் பெற்ற இலக்கியங்களும் தமிழரின் பெருமையை இன்றும் உலகிற்கு பறை சாற்றுகின்றன. தமிழ்மொழியில் முழுமையாக கிடைத்த அரிய நூல் தொல்காப்பியம், “சுட்டி ஒருவர் பெயர் கொள்ளா” மரபை உலகிற்கு வழங்கிய தொல்காப்பியரின் அகத்திணைக் கொள்கை தமிழரின் தனி அடையாளமாகும். எழுத்துக்கும் சொல்லுக்கும் இலக்கணம் வகுத்த தொல்காப்பியரின் பொருளியல் கோட்பாடு தமிழரின் அகம் புறம் சார்ந்த வாழ்வியலை மையமாகக்கொண்டு அமைந்துள்ளது.

## அகமும் ஐந்திணையும்

அகம் என்பது அகத்தில் - மனதில் நிகழும் செயலைக் குறிக்கும். அது ஒத்த அன்புடைய ஆணும் பெண்ணும் ஒருவரோடு ஒருவர் உள்ளத்தால் அன்புகொண்டு இணைந்து வாழும் இல்லற வாழ்வை அடிப்படையாகக்கொண்டு அமைகிறது. திணை என்பது நிலத்தையும் அதில் வாழும் மக்களின் ஒழுக்கத்தையும் குறிக்கிறது. திணையை,

**கைகிளை முதலாப் பெருந்திணை இறுவாய்**
**முற்படக் கிளந்த எழுதிணை என்ப** *(அகத்.1)*

என்று ஏழாக சுட்டும் தொல்காப்பியர்,

**நடுவண் ஐந்திணை நடுவணது ஒழியப்**
**படுதிரை வையம் பாத்திய பண்பே** *(அகத்.2)*

என்பதில் நடுவண் திணையாகப் பாலையை குறிப்பிட்டு, நாநில அமைப்பாக குறிஞ்சி முல்லை, மருதம், நெய்தல் இவற்றோடு தமிழ் கூறும் நல்லுலகம் அமைந்தமையைக் கூறுகிறார், முற்காலத்தில் பாலை என்ற தனி நிலம் இல்லாமையால், குறிஞ்சியும் முல்லையும் ஒன்றாகச் சேர்ந்து தன் நிலையில் மாறும்போது பாலை தோன்றுவதை நடுவணது ஒழிய என்றும் குறிப்பிடுகின்றார்.

## முதல், கரு, உரிப் பொருள்கள்

ஐவகை திணையின் நிலமும், பொழுதும் முதல்பொருள் என்றும், அந்நிலத்தில் தெய்வம் முதலாகப் பறை ஈறாகச் சுட்டப்படுபவை கருப்பொருள் என்றும், புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஒழுக்கங்கள் உரிப்பொருள் என்றும் போற்றப்படுகின்றன.

## முல்லைத் திணை

ஐந்திணையில் ஒன்றாகத் திகழும் முல்லைத் திணை கற்பின் அடையாளமாகத் திகழ்கின்றது. பத்துப்பாட்டில் ஒன்றாகிய முல்லைப்பாட்டு முல்லை நிலத்திற்கான ஒரு நெடும்பாட்டாக அமைந்துள்ளது. இதில்,

**நெல்லொடு**
**நாழி கொண்ட நறுவீ முல்லை**
**அரும்பவிழ் அலரி தூஉய்**

*(முல்லைப்பாட்டு 8-10)*

என்று முல்லை நிலத்தில் முல்லை மலர்வதையும் ஒரு நிலத்தில் அதிகம் பூக்கும் புக்களைக்கொண்டு அந்த நிலத்திற்குப் பெயர் அமைவதையும் காணலாம்.

## முல்லை நிலம்

நான்கு நிலத்திலும் முதன்மையாக அமைந்த நிலம் காடும் காடைச் சர்ந்த இடமும் ஆகும். இதனை முல்லை நிலம் என்று குறித்தனர். காட்டைத் திருத்தி மனிதன் நாட்டை உருவாக்கினான். மாயவனாகிய திருமால் விரும்பி உறையும் இடமாக காடு சார்ந்த முல்லை நிலம் அமைந்துள்ளதைத் தொல்காப்பியர்,

**மாயோன் மேய காடுறை உலகம்**

*(அகத். 5)*

என்கிறார்.

முல்லைப்பொழுது முல்லைத் திணையின் பெரும்பொழுது கார்காலம். சிறுபொழுது மாலை என்பதை,

**காரும் மாலையும் முல்லை**

*(அகத்.6)*

என்கிறார் தொல்காப்பியர். கார் காலம் என்பது மழைக்காலம். ஆவணி மாதம், புரட்டாசி மாதம் கார் காலத்திற்கு உரியதாகும். பொருளின் பொருட்டோ, வினையின் பொருட்டோ பிரிந்து சென்று, கார்காலத்தின், மாலைப்பொழுதில் மீளும் தலைவனின் திறத்தைத் தலைவி கூறுவதே முல்லைத் திணை. இக்காலத்தில் விலங்குகளும் பறவைகளும் தம் துணையோடு இன்பம் கொண்டு விளையாடுவதையும், முல்லை, பிடவம், தளவம், தோன்றி உள்ளிட்ட மலர்கள் மலர்ந்து மணம் வீசுவதையும் வரும் வழியில் காணும் தலைவன், தலைவியைக் காணும் ஆவலில் தோர் பாகனை விரைவுப்படுத்துவதும் முல்லைக்குரிய காலத்தில் நிகழ்வனவாகும்.

## முல்லைக் கருப்பொருள்

**தெய்வம் உணாவே மா மரம் புள் பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருஎன மொழிப**

*(அகத். 20)*

என்ற அடிப்படையில் தொல்காப்பியர் திணைகளுக்கான கருப்பொருளை குறிப்பிடுகின்றார். முல்லை நிலத்திற்கு உரிய மக்களாக ஆயர் வேட்டுவர் குறிக்கப்படுகின்றனர். இவர்கள்

வழிப்படும் கடவுள் திருமால். முல்லை நிலத்தின் உணவு வரகு, எள், கொள், பயிறு, உளுந்து, அவரை, கடலை, துவரை, மொச்சை போன்றவை. கொன்றை, குருந்து, புதல் மரங்கள் நிறைந்த முல்லை நிலத்தின் விலங்குகள் மானும் முயலும். பறவைகள் காட்டுக் கோழியும் கவுதாரியுமாகும் ஏறுக்கோட்பறை முல்லைக்கான பறையாகவும் சதாரிப்பண் இந்நில மக்களின் பண்ணாகவும் உள்ளது. மாடு மேய்த்தல் இவர்களின் தொழில். முல்லை, பிடவம், தளவம், தோன்றி உள்ளிட்ட மலர்கள் முல்லை நிலத்துக்குரியது. காட்டாற்று தண்ணீரே இவர்களுக்குரிய நீர் ஆதாரமாகும். பாடியும், சேரியும், பள்ளியும் இவர்கள் வசிக்கும் ஊராகும்.

### முல்லை உரிப்பொருள்

உரிப்பொருள் என்பது மக்களின் உள்ளத்திற்கு உரியப் பொருள் என்று கொள்ளலாம். ஒவ்வொரு நிலத்திற்கும் உரியதாகிய உரிப்பொருளை,

**புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்**
**ஊடல் இவற்றின் நிமித்தம் என்று இவை**
**தேரும் காலைத் திணைக்கு உரிப்பொருளே**
**(அகத்.16)**

என்ற நூற்பா வழி அறியலாம். இதில் இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்குரிய உரிப்பொருள். தலைவன் பொருளோ அல்லது புகழோ ஈட்டி வரும் வரையில் அவனது பிரிவுத் துன்பத்தைத் பொறுத்துக் கொண்டு தலைவி தலைவனுக்காக காத்திருப்பது இருத்தல் என்று கூறப்படுகிறது.

### முல்லையைப் போற்றும் கார் நாற்பது

முல்லைக்குரிய காலமாகிய கார் காலத்தை வர்ணிக்கும் நாற்பது பாடல்களைக் கொண்டு அமைந்த நூல் கார் நாற்பது. பதினெண் கீழ்க்கணக்கில் உள்ள ஆறு அகப்பொருள் நூல்களுள் ஒன்றாக அமைந்துள்ள கார் நாற்பதின் ஆசிரியர் மதுரைக் கண்ணங்கூத்தனார். இவர் பெயரை மதுரையில் வாழ்ந்த கண்ணன் என்பாரின் மகன் கூத்தனார் என்று விரித்துக் கூறுவர்.

**காலம், இடம், பொருள், கருதி நாற்பால்**
**சால உரைத்தல் நானாற்பதுவே**

என, இலக்கண விளக்கப் பாட்டியல் கூறும் இந்த இலக்கணத்தின்படி கார் நாற்பது நூலுக்கு கார் (மழை) காலம் அடிப்படையாக அமைகிறது. இந்நூல் தோழி, தலைமகள், தலைமகன், பாங்கன் ஆகியோரை உறுப்பினராக கொண்டு அமைந்துள்ளது.

### கார் காலத்தில் மீண்டு வருவேன்

"கார் காலத்தில் மீண்டு வருவேன்" என்று கூறிப் பிரிந்து சென்ற தலைவன் உரிய காலத்தில் வாராமை கண்டு தலைவி பிரிவு ஆற்றாது உரைத்தல், தோழி அவளை ஆற்றுவித்தல், வினை மீளும் தலைமகன் கார் கண்டு தன் நெஞ்சிற்கும் பாகனுக்கும் கூறுதல் ஆகிய நான்கு நிலைகளை, தோழி தலைமகட்குப் பருவங்காட்டி வற்புறுத்து வதில் (பாடல் எண்கள் - 01, 02, 04, 05, 06, 07, 08, 09, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18, 23, 26, 37, 40) இருபத்தியோர் பாடல்களும், வினைமுற்றிய தலைமகன் பாகற்குச் சொல்லியதில் (பாடல் எண்கள் - 19, 20, 21, 22, 31, 32, 33) ஏழு பாடல்களும், பருவம் கண்டு அழிந்த தலைமகள் ஆற்றல்வேண்டித் தோழி தனது ஆற்றாமை தோன்ற உரைப்பதில் (பாடல் எண்கள் - 03, 25, 34, 35) நான்கு பாடல்களும், வினைமுற்றிய தலைமகன் நெஞ்சோடு சொல்லியதில் (பாடல் எண்கள் - 24, 28, 29, 30) நான்கு பாடல்களும், தலைவர் பொய்த்தாரெனக் கூறித் தோழி தலைவியை ஆற்றுவித்தலில் (பாடல் எண்கள் -38, 39) இரு பாடல்களும், ஊடுதலாற் பசலைமிகும் எனத் தோழி தலைமகட்குக் கூறி வற்புறுத்தியதில் (பாடல் எண் - 27) ஒரு பாடலும், வினைமுற்றி மீளுந் தலைமகன்

பாகற்குச் சொல்லியதில் (பாடல் எண் - 36) ஒரு பாடலும் என எட்டுத் துறைகளைக் கொண்டு கூற்று முறையில் கார் நாற்பது அமைந்துள்ளது.

### நல்விருந்து அளிக்கும் தலைவியின் ஊர்

வினையின் பொருட்டுச் சென்ற தலைவன், தலைவியைக் காண மீண்டு வரும்போது தனது தேர்ப்பாகனிடம்,

***சிரல்வாய் வனப்பினஆகி நிரல் ஒப்ப***
***ஈர்ந்தண் தளவம் தகைந்தன சீர்த்தக்க***
***செல்வமழை மதர்க்கண் சில்மொழி பேதைஊர்***
***நல்விருந்து ஆக நமக்கு***
***(கார் நாற்பது.36)***

என்ற பாடலில் மீன்களைக் கொத்தித் தின்னும் சிச்சிலிப் பறவையின் வாய்போல் சிவந்து மலர்ந்திருக்கும் செம்முல்லைப் பூக்கள் அழகிய பொழிவோடு பூத்துக் குலுங்குகின்ற, செல்வத்தை உடைய, மழைப்போல் குளிர்ந்த பார்வையையும், அழகிய இனிமையான மொழியையும் பேசும் நம் காதலியின் ஊரானது நமக்கு நல்ல விருந்தாக அமையும் எனவே விரைவாகத் தேரைச் செலுத்துவாயாக என்று தலைவன் கூறுவதிலிருந்து தலைவியின் அழகிய ஊரே கார் காலத்தில், அழகு பெற்றுத் தலைவனுக்கு விருந்தாக அமைவதைக் காணலாம்.

### வருந்தாது அகன்ற தலைவன்

தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவிக்கு தலைவனின் நினைவின் பொருட்டு பசலை நோய் ஏற்படுகிறது. இதனால் தலைவியின் களவொழுக்கம் புறத்தாருக்கு தெரியநேரும். வினையின் பொருட்டுச் சென்ற தலைவனை நினைத்துத் தலைவி ஊடுதலால் பசலை மிகுவதைத் தவிர்க்க தோழி தலைவியிடம், மேகமானது குறிஞ்சிப் பறையைப் போல் முழங்க குருக்கத்தி பூக்கும் காலம் வந்துவிட்டது. நம்மைப் பிரிவது செல்வதற்காக வருந்தாது பிரிந்த தலைவனை நினைத்து நீ ஊடுதலைப் பாராட்டினால் உன்னை விடாமல் பசலை கொள்ளும் என்பதை,

***முருகியம் போல்வானம் முழங்கி இரங்க***
***குருகிலை பூத்தன கானம் பிரிவுஎண்ணி***
***உள்ளாது அகன்றார் என்றுஊடியாம்பாராட்ட***
***பள்ளியுள் பாயும் பசப்பு (கார் நாற்பது.27)***

எனத் தோழி தலைவியை வற்புறுத்துகின்றாள்.

### பொய்த்த தலைவன்

கார் காலம் வரும்முன் வருவதாகச் சொன்ன தலைவன் ஆண் யானையும் பெண் யானையும் கூடி விளையாடும் குளிர்ந்த காலத்தும் அவர் வரவில்லை. அவருக்காக நீ வருந்துவது ஏன்? மேலும் நண்டினது கண்ணை ஒத்த நொச்சியானது பூக்கவும், அதன் பசிய தழைகளைச் சூடிக்கொண்டு பெரிய வயல்களில் உழவர்கள் புதிதாக ஏர்பூட்ட தொடங்கினார்கள். குளிர்காலம் முடிந்து மழைக்காலம் வந்த பிறகும் உன்னைக் காண வராத நம் தலைவனுக்கு ஊர் முழுவதும் அலராகும்படி அவர் வார்த்தை மறந்தார். அவருக்காக நீ ஏன் வருந்துகின்றாய் என்று தலைவியைத் தோழி தேற்றுவதை,

***அலவன் கண்ஏய்ப்ப அரும்புஈன்று அவிழ்ந்த***
***கருங்குரல் நொச்சிப் பசுந்தழை சூடி***
***இரும்புனம் ஏர்க்கடி கொண்டார் பெருங்கௌவை***
***ஆகின்று நம் ஊர் அவர்க்கு (கார் நாற்பது.39)***

என்ற பாடலில் காணலாம்.

### தன் நெஞ்சொடு உறவாடும் தலைவன்

வினைமேற் சென்ற தலைவன் அவன் குறித்த பருவம் வரகண்டு, இதுவரை பொறுத்திருந்த தலைவி, இனியும் காணாது நான் தாமதித்தால் பொறுக்கமாட்டாள். நான் தலைவியைச் சென்று காணும் முன் என் நெஞ்சமே நீ உன் எல்லா வினையையும் ஒழித்துவிட்டு தலைவியிடம் செல் என்று தன் நெஞ்சிற்கு சுட்டுவதன் மூலம் தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பு புலனாகும். இதுபோல் தன் வருகைத் தாமதத்தால் தலைவிக்கு அலர் தோன்றாவண்ணம் என் மனமே நாம் செல்வதற்கு ஏற்றார் போல்

இந்த குளிர்ந்த காலம் இருக்கின்றது என்று கூறுவதை,

**செவ்வி உடையசுரம் நெஞ்சே காதலிஊர்**
**கவ்வை அழுங்கச் செலற்கு**

**(கார் நாற்பது.28:3-4)**

என்பதில் காணலாம்.

### தனித்திருக்கும் தலைவி

வினையின் பொருட்டுச் சென்ற தலைவன் இன்னும் மீண்டு வராததால் தனித்திருக்கும் தலைவி ஆற்றாமையால் வருந்திட தலைவன் வரும்வரை நீ ஆற்றியிருக்க வேண்டும் என்று தோழி கூறுகின்றாள். தலைவன் இன்னும் வாராத இவ்வேளையில் தனித்திருக்கும் உன்னை வருத்துவதாற்காகவே, இடி இடித்து ஆலங்கட்டிகள் புரள இருக்கின்றன. இருந்தும் நீ வருந்தாதே என்று தோழி, தலைவியைத் தேற்றுகின்றாள். மேலும் கரிய தாளினையுடைய வரகினது பொரியைப்போல் மலர்கள் மலரத் தொடங்கி தலைவன் குறித்த குறிகள் தோன்ற ஆரம்பித்துவிட்டன. தலைவன் பிரிவால் பல துன்பங்களை அடைந்து, அதனால் ஊர் அலர் தூற்றுவதைப் பொருத்து பசலை நோயை அடைந்து தலைவி வருந்துவதால்தான் வானிலிருந்து முரசு ஒலியைப் போல் மழையானது இறங்குகிறது என்பதை,

**வென்றி முரசின் இரங்கி எழில்வானம்**
**நின்றும் இரங்கும் இவட்கு**

**(கார் நாற்பது.35:3-4)**

என்கிறாள் தோழி.

### பாகனுக்குச் சொல்லும் தலைவன்

பொருளின் மேல் விருப்பம்கொண்டு பொருள் தேட சென்ற தலைவன் தன் பணியை முடித்துத் திரும்பும் முன்னரே தலைவியின் இனிய தோளை நினைத்து நெடிய காட்டு வழியே தலைவனின் மனம் செல்வதை,

**நாஞ்சில் வலவன் நிறம்போலப் பூஞ்சினைச்**
**................**
**நெடு இடைச் சென்றது என் நெஞ்சு**

**(கார் நாற்பது.19)**

என்ற பாடலில் காணலாம். தலைவன் பாகனுக்கு கூறும் இப்பாடலில் திருமாலின் முன்னோனாகிய பலராமனின் வண்ணத்தை நாஞ்சில் வலவன் நிறம்போல் என்று உவமையில் கூறுகிறார் ஆசிரியர். மேக வண்ணனாகிய கண்ணனையும் அவன் சகோதரன் பலராமனையும் இந்நூலில் குறிப்பிட்டிருப்பதைக் காணலாம். அதுபோல் பொருளீட்டும் பொருட்டு மட்டுமல்லாமல் வேந்தனுக்கு உதவும்பொருட்டும் தலைவன் பிரிந்து செல்வான் என்பதை,

**வீறுசால் வேந்தன் வினையும் முடிந்தன**

**(கார் நாற்பது.20)**

என்ற வரிகளில் அறியலாம். செல்வந்தர்களின் செல்வம் மேன்மேலும் வளரும் அதுபோல் காட்டில் பூக்கள் பூத்துக் குலுங்குவதை,

**வளம் உடையார்**
**ஆக்கம்போல் பூத்தன காடு**

**(கார் நாற்பது.22)**

என்று தலைவன் பாகனிடம் குறிப்பிடுகின்றான்.

### தலைவிக்கு பருவம் உரைத்த தோழி

தலைவன் கூறிச் சென்ற கார்காலம் வரும்முன் வருவார் என்பது தலைவியின் நம்பிக்கை. தலைவன் குறித்துச் சென்ற பருவம் வந்ததை தோழி தலைவிக்கு காட்டுகின்றாள். கடலின் நிறத் தினையுடைய திருமால் மார்பில் அணிந்த பூமாலைப் போல வானவில்லை தோற்றுவித்து இனிய மழையானது தன் துளிகளைச் சொரியும் முன்னர் தலைவன் வருவதை,

**பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்**
**திருவில் விலங்குஊன்றி தீம்பெயல் தாழ**
**வருதும்என மொழிந்தார் வாரார்கொல் வானம்**
**கருஇருந்து ஆலிக்கும் போழ்து**

**(கார் நாற்பது.01)**

என்று கூறும் தோழி, கார்காலமானது மழையைப் பொழிந்து தன் செயலைப் புரியும் முன்னர் வானில் மின்னும் மின்னல் தலைவர் இப்பொழுதே வருவார் என்று உனக்கு தூதுசொல்வது போல் வந்திருக்கின்றது என்று தலைவியிடம் சொல்வதை,

**இன்னே வருவர்நமர் என்று எழில்வானம்**
**மின்னும் அவர் தூது உரைத்து**
**(கார் நாற்பது.02)**

என்ற வரியில் காணலாம். இல்லையென்று இரப்போர்க்கு கொடுக்க வேண்டும் என்பதற்காகவும், தன்னை வந்தடைந்த பகையை அழித்து தன் புகழை நிலைநாட்ட வேண்டும் என்பதற்காகவும் நம்மைப் பிரிந்து சென்ற தலைவரை இம்மழையானது இங்கு கொண்டு வந்து சேர்க்கும் எனத் தோழி கூறுவதை,

**நச்சியார்க்கு ஈதலும் நண்ணார்த் தெறுதலும்**
**தற்செய்வான் சென்றார்த் தரூஉம் தளரியலாய்**
**(கார் நாற்பது.07:1-2)**

என்பதிலும், செல்வத்திற்காக சென்ற காதலரை,

**செல்வம்தரல் வேண்டிச் சென்றநம் காதலர்**
**வல்லே வருதல் தெளிந்தாம் வயங்கிழாய்**
**(கார் நாற்பது.14:1-2)**

என்ற வரியிலும் காணலாம். தலைவன் பொருள் தேடும் நோக்கமே இந்த மண்ணுலகில் என்றும் அழியாத புகழை நிலைநிறுத்துவதற்காகத்தான் என்பதை,

**மண்இயல் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டி**
**பெண்இயல் நல்லாய் பிரிந்தார் வரல்கூறும்**
**(கார் நாற்பது.08)**

என்பதில் அறியலாம். கார்த்திகை தீபத் திருவிழா தமிழர்களின் விழாக்களில் ஒன்று. முருகனுக்கான விழாவாக கார்த்திகை மாதம் கார்த்தகை நட்சத்திரத்தன்று வீடு தோறும் எல்லா இடங்களிலும் தீபம் ஏற்றி இறைவனை வணங்குவதோடு எங்கும் ஒளிப் பெறச் செய்வது வழக்கம். அத்தகு கார்த்திகை தீபம் போல் பூக்கள் பூத்துக் குலுங்கி மழைக்காலம் வந்ததைத் தூதாக அறிவிப்பதை,

**நலம்மிகு கார்த்திகை நாட்டவர் இட்ட**
**தலைநாள் விளக்கின் தகை உடையவாகி**
**புலம்எலாம் புத்தன தோன்றி சிலமொழி**
**தூதொடு வந்த மழை (கார் நாற்பது.26)**

என உரைக்கும் தோழி, வேந்தனுக்காக போர் தொழில் செய்யச் சென்ற தலைவன் நிறைந்த சூழினை உடைய மழையின் இந்தக் காலத்தைக் கண்ட உடனே வருவார் என்பதை

**பெரும்பதக் காலையும் வாரார்கொல் வேந்தன்**
**அருந்தொழில்வாய்த்தநமர் (கார்நாற்பது.37:3-4)**

என்ற வரிகளில் காணலாம்.

## நிறைவாக

"வந்தன செய்குறி வாரார் அவர்"(40) தலைவன் வருவதாக கூறிச் சென்ற காலம் வந்துவிட்டது. அவன் இன்னும் வரவில்லை என்று கார்காலத்தின் வருகையையும் கார் காலத்தில் நிகழும் நிகழ்வுகளையும் நம் கண் முன்னே காட்சியாக காட்டும் நூல் கார் நாற்பது. முல்லைத் திணைக்குரிய முதல், கரு, உரிப் பொருட்களை கொண்டு இந்நூல் அமைந்திருப்பதைப் பாடல்கள் எடுத்துரைக்கின்றன. முல்லையின் தெய்வமாகிய திருமாலை குறிப்பிட்டதோடு அல்லாமல் பலராமனும் இந்நூலில் குறிக்கப்பட்டுள்ளார். முருகனுக்கு உகந்த கார்த்திகை தீபம் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளது. குறிஞ்சித்திணைக்குரிய குறிஞ்சிப் பறை (27) பற்றிய செய்தியும் இடம்பெற்றிருக்கும் கார் நாற்பதில், ஆலங்கட்டி மழை (23), எருமை (10,31)), மயில் (12), அசோகு (16), வெண்கடம்பமம் (19), கருவிளைப்பூக்கள்(09)பற்றியசெய்திகளும் இடம் பெற்றுள்ளன. யானைகளைப் பற்றி அதிகமாக இந்நூலில் கூறப்பட்டுள்ளது. இருத்தல் என்ற உரிப்பொருளுக்குரிய முல்லைத்திணையில் எவ்வாறாயினும் தலைவன் பருவம் கண்டும் வரலாம், அவன்

குறித்த பருவத்திலோ அல்லது அதனைத் தொடர்ந்த பருவத்திலோ வரலாம். அவன் வரவு வரை தலைவி ஆற்றியிருக்கத்தான் வேண்டும் என்பதைத் தோழியின் மொழிகளிலிருந்து அறியலாம். பருவம் பொய்க்கலாம் தலைவன் பொய்க்கமாடான் என்னும் தலைவியின் உள்ளக்கிடக்கைக்கு ஏற்பவே இருத்தல் என்பது தலைவன் வரவிற்காகக் காத்திருத்தல், பொறுத் திருத்தல் என்ற பொருளில் அமைவதால் அது கற்பாகின்றது. தலைவன் பிரிவையும், அவன் மீண்டு வருவதையும், கார்காலத்திற்கு முன், கார்காலத்திற்குப் பின் தோற்றமளிக்கும் காட்டின் நிலைமையோடு ஒப்பிடுவதாக அமைந்த,

**செல்வர் மனம்போலக் கவின்ஈன்ற நல்கூர்ந்தார்**
**மேனிபோல் புல்என்ற காடு**

**(கார் நாற்பது 18)**

என்ற வரிகள் முல்லை திணைக்கும் கார் நாற்பதிற்கும் சிறப்பு சேர்ப்பனவாகும்

## துணைநூல் பட்டியல்

1. அருணாசலம், மு.,இராஜா வரதராஜா, தமிழ் இலக்கிய வரலாறு, அருண் பதிப்பகம், திருச்சி. 2012.
2. இளம்பூரணர் (உ.ஆ), தொல்காப்பிய பொருளதிகாரம், சாரதா பதிப்பகம், சென்னை. 2008.
3. கௌமாரீஸ்வரி. எஸ் (தொ-ஆ), பதினெண் கீழ்கணக்கு நூல்கள் - மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், சென்னை. 2009.
4. மதுரைக் கண்ணங் கூத்தனார் (ஆசிரியர்), கா.ர.கோவிந்தராஜ முதலியார் (உ-ஆ), கார்நாற்பது, மதராஸ் ரிப்பன் அச்சியந்தர சாலை, சென்னை. 1924.